**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

CC 125/2021

தேதி: 06.02.2026

**<u>அ.சா.5 தியாகராஜன் த/பெ மாறன்</u>**
**<u>எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.</u>**
**<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி:-</u>**

1. அன்றைய தேதியில் ஆஜர் எதிரி நம்பர் பிளேட் இல்லாமல் இருசக்கர வாகனத்தில் வந்தார். அதற்கு முன்பு என்னை தேக்கினார்கள் நான் நின்றேன் ஆஜர் எதிரி நிற்கவில்லை. ஆஜர் எதிரியை போலிசார் விரட்டி பிடித்தார்கள். நம்பர் பிளேட் இல்லாத வண்டியை பற்றி விசாரித்தபோது ஆர்.சி புக் எதுவும் அவரிடம் இல்லை வேறு ஆவணங்களும் இல்லை. வேறு வேறு மாற்றி மாற்றி பதில் சொன்னார். போலிசார் எங்கு இருக்கு என்று கேட்டார்கள் ஆத்து ஓரமாக கரையில் அழைத்துச் சென்றார்கள் நானும் சென்றேன். ஆற்றுக் கரையில் கொட்டாயி இருந்தது. அதில் 10 செல்போன்கள் இருக்கும் எண்ணி பார்க்கவில்லை மற்றும் லேப்டாப் மற்றும் ஒரு பாக்ஸ் இருந்தது. அதை போலிசார் எடுத்துக் கொண்டு ஆஜர் எதிரி அழைத்து வந்து விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. நம்பர் பிளேட் இல்லாத வண்டி என்ன வண்டி என்றால் Honda வண்டி என்ன மாடல் என்று தெரியாது. Splendor மாறி இருந்தது. என்னை போலிசார் தடுத்து நிறுத்திய தேதி நேரம் 25.09.2017 காலை 09.00 மணிக்கு மேல் இருக்கும். ஆஜர் எதிரி வண்டியை நிறுத்தாமல் சென்றார் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆற்றுபடுகை பக்கம் கூட்டிச் சென்று கீட்று கொட்டகையில் பொருட்கள் காமித்து எடுத்துதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. என் முன்னிலையில் பொருட்கள் எடுத்திருந்தால் என்னென்ன பொருட்கள் என்று நான் சரியாக சொல்லியிருப்பேன் என்றால் பார்த்ததை சொன்னேன். என்னுடன் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் பரத் என்பவர் கையொப்பம் செய்தார். போலிசார் கேட்டதால் கையொப்பம் போட்டேன் என்றால் பார்த்தேன் அதற்காக போலிசார் கேட்டார்கள் போட்டேன். நான் முதல் விசாரணையின் சொன்ன இடத்திற்கு ஆஜர் எதிரி வரவில்லை என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் முன்னிலையில் பொருட்கள் கைப்பற்றியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் துறையினர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.09 11:12:23 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**